**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.292/2020</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி., பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 09 ஆம் நாள் செவ்வாய் கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. அமுதவள்ளி, மொழி பெயர்ப்பாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரிமளா | கணவர் பெயர் | : | ராஜா |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 09.06.2026

**P.W. : 1**

**<u>சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு, வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி</u>**

நான் வாதி ஆவேன். எனது முதல் விசாரணை தொடர்ச்சிக்காக கூடுதல் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது SSLC பதிவேடு வா.சா.ஆ.8 ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும்.

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

வா.சா.ஆ.8 சமயத்தில் என் அப்பாவிற்கு சுமார் 64 வயது

இருக்கும். என் தகப்பனார் முதலில் கையொப்பம் செய்வார். என் அப்பா 5 ஆண்டுகள் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். என் அப்பா 1986 ல் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். என் தந்தைக்கு 1982 லேயே பக்கவாத நோய் வந்துவிட்டது. அதன் பிறகு, அவரது வலது கை மற்றும் வலது கால் விளங்கவில்லை. வாயும் பேச முடியாது. 1982 க்கு பிறகு என் அப்பா வெளியில் போக வேண்டும் என்றால் தூக்கி கொண்டுபோவோம். எல்லா இடங்களுக்கும் அவ்வாறு செல்ல மாட்டோம். எங்கள் குடும்ப திருமணத்திற்கு மட்டும் அவ்வாறு சென்றுள்ளோம். எனது திருமணத்தின்போது என் அப்பா வந்து உட்காந்திருந்தார். எனது திருமணத்தை பெரியண்ணன் நடத்தினார். என் திருமணம் நடந்த விவரம் என் அப்பாவிற்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் சும்மா வந்து உட்காந்திருந்தார். அவருக்கு அந்த சமயத்தில் ஞபாக சக்தி இல்லை. என் கணவரை என் அப்பாவிற்கு தெரியுமா என்றால் பார்த்துள்ளார் ஆனால் அடையளாம் காணும் அளவிற்கு தெரியாது. என் தந்தை இறக்கும்வரை நல்ல மனநிலையில் இருந்தார் என்றும், அவருக்கு எல்லா விவரங்களும் தெரியும் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.